**திண்டுக்கல்–01, அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் திரு. மு.நாகராஜன் எம்.எஸ்சி,எம்.பில்,பி.ஜி.டி.சி.ஏ,**

செ.மு.ந.க.எண். 000001/அ1/2024 நாள்.07.10.2024

பொருள்: பணியாளர் தொகுதி – திண்டுக்கல், அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் – தமிழ்நாடு அமைச்சுப் பணிதொகுதிIV –2020-2022 ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு – **திரு.ரா.செல்வராஜ்,** இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கியது-பணிவரன்முறை செய்து ஆணைவழங்குதல்-தொடர்பாக.

பார்வை: 1.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் செயலாளர் அவர்களின் கடித எண்.1948/PSD-D2/2023 ,நாள்.10.01.2024.
2.சென்னை–6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடித ந.க.எண்.221293 /இ2–1/2023, நாள்.12.02.2024.
3.திண்டுக்கல், அரசுத் தேர்வுகள்உதவி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.000001/அ/2023, நாள்.16.02.2024.

*****

ஆணை:

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதத்தின் படி தமிழ்நாடுஅமைச்சுப் பணிதொகுதி IV – 2020-2022 ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்பட்டு, பார்வை 2–ல்காணும் அரசுத்தேர்வுகள் இணைஇயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடிதத்தின் படியும், பார்வை 3–ல் காணும் திண்டுக்கல், அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநரின் செயல்முறைகளின் படியும் திண்டுக்கல், அரசுத் தேர்வுகள்உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு **21.02.2024 முற்பகல்** முதல் பணிபுரிந்துவரும் **திரு.ரா.செல்வராஜ்** என்பாரின் பணியினை அன்னாரின் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாள்முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் வரன்முறைப்படுத்தப்படுகிறது எனவும், இவர்தம் மூன்றாண்டு கால தொடர் பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தை மனநிறைவுடன் முடிக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

மேலும், இந்நியமனம் தற்காலிகமானதெனவும், 2020–2022 தொகுதி IVபணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு மனுவின் முடிவிற்கு உட்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண்<br>(1) | பெயர் மற்றும் பதவி<br>செல்வி.<br>(2) | பணியேற்றநாள்<br>(3) | பணிவரன் முறைசெய்யும் நாள்<br>(4) |
|---|---|---|---|
| 1. | **திரு.ரா.செல்வராஜ்**<br>இளநிலைஉதவியாளர். | **21.02.2024**<br>முற்பகல் | **21.02.2024**<br>முற்பகல் |

07/x/24

உதவிஇயக்குநர்

பெறுநர்

திரு.ரா.**செல்வராஜ்,** இளநிலை உதவியாளர்.

அரசுத் தேர்வுகள்உதவிஇயக்குநர் அலுவலகம், திண்டுக்கல்.

நகல்:

1.சென்னை–6, அரசுத் தேர்வுகள்இணைஇயக்குநர் (பணியாளர்) அவர்களுக்கு –தகவலுக்காகபணிந்தனுப்பப்படுகிறது.

2.உபரி

Scanned with OKEN Scanner